# 2016 நவம்பர் 29ஆந் திகதியின் சபை அலுவல்கள்

**திகதி :** 2016-11-29

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

**குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

பொது மனுக் குழுவின் ஆறாவது அறிக்கை அக்குழுவின் தவிசாளர் கௌரவ சுஜீவ சேனசிங்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**மனுக்களைச் சமர்ப்பித்தல்**

பின்வரும் பாராளுமன்ற உறுப்பினரினால் பொதுமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன:-

(i) கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே
(ii) கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே - ஐந்து மனுக்கள்
(iii) கௌரவ புத்திக பத்திறண - ஐந்து மனுக்கள்

(மனுக்கள் பொதுமனுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்)

**தனியார் உறுப்பினர்கள் சட்டமூலங்கள்**

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன அவர்களுக்கு **"நாட்டில் சுற்றாடல் மன்ற (கூட்டிணைத்தல்)"** சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

நிலையியற் கட்டளை 47(5) இன் கீழ் பாராளுமன்றத்திற்கு அறிக்கை செய்வதற்கு மேற்சொன்ன சட்டமூலம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்**

**ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017) - குழு**

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் (2017) ஒதுக்கப்பட்ட பதினைந்தாம் நாள் இன்றாகும். - " குழு நிலை விவாதம்"

**ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை**

"வடக்கு மற்றும் கிழக்கில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் நியமனங்கள்" தொடர்பான ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர் அவர்களால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனையடுத்து, 1841 மணியளவில் பாராளுமன்றமானது 2016 நவம்பர் 30ஆந் திகதி புதன்கிழமை 0930 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

[வரவு செலவுத் திட்டம் 2017]

* இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.